Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk


# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 23, 2023

புதன்கிழமை 23 ஒகஸ்ட், 2023 | ஒளி: 09 கதிர்: 068 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | FREE

## கடும் வெப்ப எச்சரிக்கை




நாட்டின் பல பகுதிகளில் கடுமையான வெப்பம் காரணமாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், வெப்ப சுட்டெண் ஆலோசனையை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் சில இடங்களில் வெப்பச் சுட்டெண், எச்சரிக்கை மட்டம் வரை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## மதுபான விலைகளை குறைக்க வேண்டும்



மதுபானங்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதனால் மக்கள் கசிப்பு காச்சி குடிக்க நேரிடும் என்பதுடன் போதை மாத்திரையை பயன்படுத்தும் நிலைமையும் ஏற்படும் என்றும் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

ரத்வத்தை விவகாரத்துக்கு எதிரான போராட்டத்தால்

# சபையில் அமளி

**தமிழ் எம்.பிக்கள் சபைக்கு நடுவே அமர்ந்து எதிர்ப்பு**

**‘நரகாசுரனை கைது செய்; கயவனை கைது செய்” என கோஷம்**

மாத்தளை, ரத்வத்தை தோட்டத்தில் உள்ள வீட்டை தோட்ட முகாமையாளர் உடைத்தெறிந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அந்த தோட்ட முகாமையாளரை உடனடியாக கைது செய்ய வலியுறுத்தியும் மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் எம்.பிக்களுடன் இணைந்து எதிர்க்கட்சிகளும் போராட்டத்தில் குதித்ததால் சபையில் சுமார் 2 மணிநேரம் வரை அமளிதுமளி ஏற்பட்டது.

தொடர்ச்சி P2



காலி சிறையில் 2 கைதிகள் மரணம்

## இரண்டு வாரங்களுக்கு அனுமதி இல்லை



காலி சிறைச்சாலையில் மெனிங்கோகோகல் எனப்படும் கொடிய பற்றீரியாவால் இரண்டு கைதிகள் உயிரிழந்ததை அடுத்து, இரண்டு வாரங்களுக்கு புதிய கைதிகளை அனுமதிக்காமல் இருப்பதற்கும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் இருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



வரட்சியால் பாதிக்கப்பட்ட

## விவசாயிகளுக்கு ரூ.40,000 நட்டஈடு

**தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பேன் –அமரவீர**

நாட்டில் நிலவும் வரட்சியான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு 40 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் நட்டஈட்டுத் தொகையை அதிகரிக்க அமைச்சரவையில்

தொடர்ச்சி P2

## காபன் சீராக்கல் ஒப்பந்தம் கைச்சாத்து



பரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6இற்கு அமைய, காபன் சீராக்கல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

சிங்கப்பூருக்கான இருநாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு பிற்பகல் இஸ்தானா மாளிகையில்

தொடர்ச்சி P2

குருந்தூர் விகாரை குறித்து

## இன,மத, பிரிவினைவாத மோதல்கள் ஏற்படலாம்

**சபையில் ஜயந்த சமரவீர எம்.பி தெரிவிப்பு**



குருந்தூர் விகாரையை அடிப்படையாகக் கொண்டு இனவாத, மதவாத, பிரிவினைவாத மோதல் இந்த விகாரையை அடிப்படையாகக் கொண்டு ஏற்படலாம் என்று இந்திய புலனாய்வுத்துறை கூறியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன என்றும் இதற்கு தொல்பொருள் திணைக்களமே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் சுயாதீன எதிரணி குழுவை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜீவனின் நடவடிக்கை எதிர்க்கட்சிக்கு கசந்தது



மாத்தளை, ரத்வத்தை தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் செய்ய முற்படக் கூடாது என்றும் சம்பவ இடத்திற்கு சென்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தமை எதிர்க்கட்சினருக்கு பொறுக்கவில்லை என்றும் ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 60 சூட்டு சம்பவங்களில் 36 பேர் பலி; 28 பேர் காயம்

2023ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 60 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 36 பேர் பலியாகியுள்ளடன், மேலும் 28 பேர் காயம் அடைந்துள்ளதாகவும் மேலும் 6 சூட்டு சம்பவங்களில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2






## அநீதிக்கு சபையில் சஜித் கண்டனம்

**அமைச்சரே பொறுப்பு என்கிறார் சஜித்**

அரசாங்க தோட்டமொன்றில் நடந்த அநீதியை பாராளுமன்றத்துக்கு செவ்வாய்க்கிழமை (22) கொண்டு வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பெருந்தோட்ட மக்கள், உழைக்கும் மக்கள் மீதான கொடூரமான அடக்குமுறைகளை எதிர்க்கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்தார்.

மாத்தளை, எல்கடுவ ரத்வத்த கீழ் பகுதியில் வசித்து வந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் தோட்ட உதவி முகாமையாளரால் 19 ஆம் திகதி வெளியேற்றப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 20 நாள்களில் 1 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

ஒகஸ்ட் மாதத்தின் முதல் 20 நாள்களில் சுமார் 1 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தரவுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

ரத்வத்தை தோட்ட விவகாரம்

## உரிய நடவடிக்கை எடுக்கப்படும்



மாத்தளை, ரத்வத்தை தோட்ட விவகாரத்தில் தோட்ட நிர்வாகத்தினரின் செயற்பாடு முறையற்றது என்பதை ஏற்றுக்கொள்கிறோம் என்றும் ஆகவே இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கையை பெருந்தோட்டத்துறை அமைச்சர் என்ற ரீதியில் எடுப்பேன் என்றும் பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 45,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது

ஷேன் செனவிரத்ன



பாடசாலை கட்டமைப்பில் 45,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும், அந்த ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சிடம் சரியான வேலைத்திட்டம் இல்லாததால், இலங்கையின் கல்வித்துறை பாரிய வீழ்ச்சியை சந்திக்கும் அபாயம் இருப்பதாகவும் இலங்கை கல்வியாளர் சேவை விரிவுரையாளர்கள் தொழில் சங்கத்தின் செயலாளர் சுவநதிலக்க கஜதீர தெரிவித்துள்ளார். கண்டியில் செவ்வாய்க்கிழமை (22) ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றி, ஆசிரியர் கலாசாலைகளுக்குள் நுழைய எதிர்பார்த்த மாணவர்கள் கிட்டத்தட்ட ஐ ந்து வருடங்களாக வீட்டிலேயே தங்கியுள்ளனர்.

கடந்த கொவிட் பருவத்தில், பல ஆசிரியர் கல்லூரிகள் சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், பயன்பாட்டிற்குப் பிறகு மெத்தைகள் மற்றும் தலையணைகள் அழிக்கப்பட்டதால் அவர்களின் பல வளங்கள் இழக்கப்பட்டுள்ளதாகவும் கஜதீர கூறினார்.

தொடர்ச்சி P2

## நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை



தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நீதிமன்றத்திற்கும், நீதிமன்றத்தின் செயற்பாட்டுக்கும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை என்றும் இவ்விடயம் குறித்து நீங்கள் நீதிமன்றத்தை நாடுங்கள் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சபையில் அமளி

சபைக்கு நடுவே வந்தமர்ந்த எம்.பிக்கள், "நரகாசுரனை கைது செய்; கயவனை கைது செய்" என முழக்கமிட்டதுடன் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டதால் சபை நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை சபாநாயகருக்கு ஏற்பட்டது.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (22) காலை கூடியபோது மாத்தளை, ரத்வத்தை தோட்டத்தில் வசிக்கும் குடும்பமொன்றின் வீட்டை, தோட்ட முகாமையாளர் உடைத்தெறிந்தமைக்கு நீதி கோரி, வடிவேல் சுரேஷ் எம்.பி முழக்கமிட ஆரம்பித்தார்.

இதையடுத்து ஏனைய மலையக எம்.பிக்களும் கோஷங்களை எழுப்பியவாறு சபைக்கு நடுவே இறங்க, இவர்களுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு மாகாண எம்.பிக்களும் ஏனைய எதிர்க்கட்சி எம்.பிக்களும் இணைந்து கொண்டு, பதாகைகளை ஏந்தியவாறு எம்.பிக்கள் "நரகாசுரனை கைது செய்; கயவனை கைது செய்; நீதி வேண்டும்" என சபைக்கு நடுவே இறங்கி முழக்கமிட்டனர்.

இவர்களை சமாதானப்படுத்த, கட்டுப்படுத்த சபாநாயகர் முயன்றபோதும் முடியாத நிலை ஏற்பட்டதால், படைக்கல சேவிதர்களால் செங்கோலுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டத்துக்கு அமைச்சர்கள் ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் பதிலளித்து நிலைமையை கட்டுப்படுத்த முயன்றபோதும் அது முடியவில்லை. இந்நிலையில் சபைக்கு நடுவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், சபைக்கு நடுவே அமர்ந்து ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர் .

ரத்வத்தை தோட்டத்தில் வசிக்கும் குடும்பமொன்றின் வீட்டை உடைத்த தோட்ட முகாமையாளரை உடனடியாக கைது செய்ய வேண்டுமென்பதே ஆர்ப்பாட்டக்காரர்களின் முக்கிய வலியுறுத்தலாக இருந்தது.

எம்.பிக்களான வடிவேல் சுரேஷ், மனோ கணேசன், இராதாகிருஷ்னண், வேலுகுமார், சமிந்த விஜேசிறி ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ "அரசாங்கத்துக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வீட்டை எவ்வாறு அடித்த நொறுக்க முடியும்? எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க சென்றாலும் தோட்ட மக்களுக்கு அரசாங்கம் நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்ககவில்லை" என்றார்.

ஆளும் கட்சியின் பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். சம்பவ இடத்திற்கு சென்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தமை எதிர்க்கட்சினருக்கு பொறுக்கவில்லை" என்றார்.

சம்பந்தப்பட்டவரை கைது செய்ய அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்ததுடன், "யாரும் எமக்கு ஆதரவளிப்பதில்லை. அரசாங்கத்தில் எந்த ஆதரவும் எனக்கு கிடைப்பதில்லை. தனியாக செயற்படுவதற்கு சிரமமாக உள்ளது. நீங்கள் அனைவரும் மூத்த உறுப்பினர்கள். எனக்கு உதவி செய்ய வேண்டும்" என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார்.

"விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடனும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடனும் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும். இது போன்ற சம்பவங்கள் தெற்கிலும் நடக்கின்றன. இது நாட்டின் சொத்தே. இதனால் முறையற்ற வகையில் நடந்துகொள்ள வேண்டாம் என்று தோட்ட நிறுவனங்களை கேட்டுக்கொள்கின்றோம்" என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

# கடும் வெப்ப எச்சரிக்கை

ஈரப்பதம் மற்றும் அதிகபட்ச வெப்பநிலையைப் பயன்படுத்தி வெப்ப சுட்டெண் கணக்கிடப்படுவதுடன், இது ஒரு நபரின் உடலில் உணரப்படும் நிலை என்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் ஆலோசனையின்படி தயாரிக்கப்பட்ட சுட்டெண்ணின்படி, 'எச்சரிக்கை' நிலை என்பது நீண்டகால வெளிப்பாடு மற்றும் செயற்பாடுகளால் சோர்வு மற்றும் வெப்ப பிடிப்புகளையும் ஏற்படுத்தலாம்.

கடுமையான வெளிப்புற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறும், குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் நோயாளிகளைக் கவனிக்குமாறும், வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் நீராகாராங்களைப் பருகுமாறும், முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வெடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# 60 சூட்டு சம்பவங்களில் 36 பேர் பலி; 28 பேர் காயம்

சில துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிலம் தொடர்பான தகராறுகள் போன்ற தனிப்பட்ட தகராறுகளுடன் தொடர்புடையவை என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற குழுக்களின் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவை என்றார். இந்த ஆண்டு துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அதிகரித்துள்ளனவா என்று வினவியபோது, கடந்த ஆண்டைப் போலவே நிலைமை இருப்பதாகவும் இருப்பினும் தரவுகளைக் குறிப்பிடாமல் உறுதியான மதிப்பீட்டை வழங்க முடியாது என்றும் தெரிவித்தார்.

# 20 நாள்களில் 1 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

98,831 பயணிகள் வருகை தந்துள்ள நிலையில், அதில் 19,804 இந்திய பிரஜைகள் அடங்குவதுடன், இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து 12,188 பேரும் சீனாவில் இருந்து 6,964 பேரும் ஜேர்மனியில் இருந்து 6,241 பேரும் பிரான்சிலிருந்து 5,215 பேரும் வருகை தந்துள்ளனர்.

ரஷ்யாவில் இருந்து 4,552 பேரும் இத்தாலியில் இருந்து 4,334 பேரும் அவுஸ்திரேலியாவில் இருந்து 3,678 பேரும் கனடாவில் இருந்து 3,611 பேரும் வருகை தந்துள்ளதாக சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜூலை மாதத்தில் மொத்தம் 143,039 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள நிலையில், இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 866,744 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

# ஜீவனின் நடவடிக்கை...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) மேற்படி விவகாரம் தொடர்பில் இடம்பெற்ற சர்ச்சையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"ரத்வத்தை தோட்ட சம்பவம் தொடர்பில், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரான ரமேஷ் பத்திரண அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெரிவித்து, குறித்த சம்பவம் தொடர்பில் வருத்தத்தையும் சபையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவத்துடன் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்புள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

அந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். சபாநாயகர் கூறுவது போல் நாட்டின் பல இடங்களிலும் இது போன்று அதிகாரிகள் முறையற்ற வகையில் செயல்படுவதால் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

அதனை வைத்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் செய்ய முற்படக் கூடாது. அது தவறு. சம்பவ இடத்திற்கு சென்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தமை எதிர்க்கட்சினருக்கு பொறுக்கவில்லை" என்றார்.

# காபன் சீராக்கல் ஒப்பந்தம் கைச்சாத்து

செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்றது. இருநாட்டு தலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ பேச்சுகளை தொடர்ந்து இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கு இடையில் காணப்படும் ஒத்துழைப்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் தலைவர்கள் அவதானம் செலுத்தியிருந்ததோடு, பரந்த பொருளாதார ஒருமைப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

பரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6இற்கு அமைய, காபன் சீராக்கல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

சிங்கப்பூர் வர்த்தக மற்றும் கைத்தொழில் நிரந்தரச் செயலாளர் (அபிவிருத்தி) பெக் ஸ்வன் மற்றும் சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சசிகலா பிரேமவர்தன ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

# இரண்டு வாரங்களுக்கு....

காலி சிறைச்சாலையில் இரு கைதிகளை பலிகொண்ட நோய் கண்டறியப்பட்டதை அடுத்து, இரண்டு வாரங்களுக்கு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவதில்லை என அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

தேவைப்பட்டால், அதிகாரிகள் 'சூம்' மூலம் கைதிகளை ஆஜர்படுத்துவார்கள் என்றும் பாதுகாப்பு நடவடிக்கையாக காலி சிறைச்சாலையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் ஏழு பேர் சுகவீனமடைந்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், இவ்வாறான அறிகுறிகளுடன் நோயாளர்களைக் கையாளும் போது, முகக்கவசம் அணியுமாறு கராப்பிட்டிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காலி சிறைச்சாலை வளாகத்தில் உள்ள அனைத்து நபர்களும் முன்னெச்சரிக்கையாக முகக்கவசம் அணியுமாறு சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# விவசாயிகளுக்கு...

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு நட்டஈட்டுத்தொகை அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் நிலவும் கடும் வரட்சியான வானிலையால் ஓகஸ்ட் 23ஆம் திகதிய மதிப்பாய்வுக்கு அமைய 47,107 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளது. கடும் வரட்சியால் குருநாகல் மாவட்டத்தின் நெற்பயிர்ச்செய்கை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய நெல் உள்ளிட்ட ஆறு விவசாய பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது விவசாயிகளுக்கு 40 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, விவசாயிகள் தமது விளை நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை அருகில் உள்ள விவசாய சேவைகள் நிலையத்துக்கு தெரியப்படுத்தி, விவசாய நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பான மதிப்பாய்வுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

# மதுபான விலைகளை...

"சுற்றுலா பயணிகள் இரவு 10 மணிக்கு பின்னர் உறங்குவதற்காக இந்த நாட்டுக்கு வருவதில்லை. இன்னும் இரவில் திறக்கப்படாது இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் 10 மணிக்கு பின்னர் உறங்கிவிடுகின்றனர்.

மாலைதீவு போன்ற நாடுகளில் இவ்வாறு இல்லை. சுற்றுலாத்துறையினருக்காக விசேட திட்டங்கள் உள்ளன. இப்போதுள்ள நிலைமையிலேயே சென்றால் இதுவரை காலம் கிடைத்த பெறுபேறே கிடைக்கும்.

இங்கே இரவு நேர பொருளாதாரம் முக்கியமாகும். இலங்கை உலக நாடுகளுடன் தொடர்புபட வேண்டும். இவ்வளவு அழகான நாட்டை இப்படி இரவில் பூட்டி வைப்பதால் பலனில்லை. உலக நாடுகளில் 70 சதவீதம் இரவு நேர பொருளாதாரம் உள்ளது. இது தொடர்பில் யோசனைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளோம்.

இரவு 10 மணிக்கு பின்னர் சுற்றுலா ஹோட்டல்களில் பார்கள் மூடப்படுகின்ற.ன ஏன் இதற்கு மேல் திறந்து வைக்க முடியாது. இவற்றை மாற்ற வேண்டும். மதுபானங்களில் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சாராயத்தின் விலை அதிகமாக இருக்கின்றது என்றார்.

# 45,000 ஆசிரியர்களுக்கு...

ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் சேவையில் பணிபுரிந்து ஆசிரியர் பயிற்றுவிப்பாளராக சேவையில் இணைவதாகவும் ஆனால் தற்போது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் குறைவாகவே உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அநீதிக்கு சபையில்...

தற்காலிகமாக அவர்களுக்கு தங்க அனுமதிக்கப்பட்டிருந்த குடியிருப்புகளும் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்திற்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், சம்பவத்திற்கு அமைச்சரே பொறுப்புக் கூற வேண்டும் என்றும், அமைச்சர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று செயற்பட்டும் பயனில்லை என்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள பெருந்தோட்ட சமூகத்தை அரசாங்கம் எவ்வாறு நடத்துகிறது என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாகவும், தோட்ட மக்களுக்கு நீதி வழங்குவதில் அரசாங்கம் வெற்றிகாணவில்லை என்றும் கூறினார்.

# இன, மத, பிரிவினைவாத...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, பௌத்த சாசன, மத விவகார மற்றும் கலாசார விவகார அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே ஜயந்த சமரவீர இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,"குருந்தூர் விகாரை என்பது வடக்கில் உள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க பெரிய விகாரையாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு சர்ச்சைக்குரிய விடயங்கள் செய்திகளில் வெளிவருகின்றன.

இதன்படி இனவாத, மதவாத, பிரிவினைவாத மோதல் இந்த விகாரையை அடிப்படையாகக் கொண்டு ஏற்படலாம் என்று இந்திய புலனாய்வுத்துறை கூறியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொல்பொருள் திணைக்களம் தமது கடமைகளை முறையாக செய்யாத காரணத்தாலேயே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அங்கு விகாரை இருந்தமை தொல்பொருள் அகழ்வுகளின் மூலம் உறுதியாகியுள்ளமை உண்மையாகும். அவ்வாறு இருக்கையில் பௌத்த சின்னங்கள் அங்கிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தவிடயத்தில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு எவருக்கும் சவால் விடுக்க முடியாது.

ஆனால், இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடத்தை தமிழ், இந்து ஆலயமாக காட்டும் முயற்சி உள்ளது. அதுவே இனவாத, மதவாத மோதல்களுக்கு கொண்டு செல்கின்றது.

அண்மையில் பொங்கல் நிகழ்வு அங்கே நடத்தப்பட்டது. இது பௌத்த மக்களின் மனங்களை புண்படச் செய்யும் நடவடிக்கையாகும். நல்லூர் கோவிலுக்கு சென்று பௌத்த போதனையை செய்தால் அது தமிழ் மக்களுக்கு மன வேதனையை ஏற்படுத்தும். அங்கு அனைத்து மதத்தவர்களும் செல்வார்கள். அங்கு செல்பவர்கள் சட்டதிட்டங்களை மதித்தே செயற்படுகின்றனர்.

குருந்தூர் விகாரைக்கு எவருக்கும் வர முடியும். எனினும் பொங்கல் நிகழ்வை நடத்த முடியாது. இந்த விடயத்தில் பொறுப்பற்ற வகையில் நடந்துகொண்ட அதிகாரிகளுக்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன என்றார்.

# நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சபாநாயகர் சபையில் விடுத்த அறிவிப்பு நீதிமன்றத்துக்கும் நீதிமன்றத்தின் செயற்பாடுகளுக்கும் அழுத்தம் பிரயோகித்துள்ளது எனவும் தேசிய கடன் மறுசீரமைப்பு யோசனை சட்டமூலமல்ல; ஆகவே அதை ஏன் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது எனவும் கேள்வியெழுப்பியதை அடுத்தே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டதுடன், அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, "தேசிய கடன்களை மறுசீரமைக்கும் யோசனையை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்தது சட்டமூலமல்ல; தேசிய கடன் மறுசீரமைக்க எடுத்த தீர்மானத்தால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தொழிற்சங்கத்தினர் உயர்நீதிமன்றத்தை நாடினார்கள்.

இவ்விடயம் குறித்து பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பினர் கேள்வியெழுப்பிய போது "பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது என நீங்கள் (சபாநாயகர்) சபையில் குறிப்பிட்டீர்கள்.

> **தேசிய கடன் மறுசீரமைப்பு, ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்படும் பாதிப்பை ஏன் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது**

அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனையை நீதிமன்றத்தில் ஏன் சவாலுக்குட்படுத்த முடியாது. தேசிய கடன் மறுசீரமைப்பு, ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்படும் பாதிப்பை ஏன் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது" என சபாநாயகரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், இந்த விடயம் தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வில் கேள்வி எழுப்பினீர்கள்; நான் பதிலளித்தேன். உரிய சட்ட ஆலோசனைகளுக்கு அமையவே நான் அந்த அறிவிப்பை பாராளுமன்றத்தில் விடுத்தேன். ஆகவே இவ்விடயம் தொடர்பில் தொடர்ந்து பேசுவது அவசியமற்றது" என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய விமல் எம்.பி "ஆளும் தரப்பினர் ஒரு யோசனையை கொண்டு வந்தால் அதை பாராளுமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாதா என்று குறிப்பிடுகின்றீர்கள்" என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் "தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் எவரும் உயர்நீதிமன்றத்தை நாடலாம். அதற்கு தடையில்லை" என்றார்.

# உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரத்வத்தை தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினரிடமும் மலையக அரசியல் பிரதிநிதிகளிடமும் அரசாங்கத்தின் சார்பில் கவலை தெரிவித்துக் கொள்கிறோம். நடக்க கூடாத சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அனுமதியற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்ட அந்த தற்காலிக குடியிருப்பை அகற்றுவது அந்த தோட்டத்தின் உதவி முகாமையாளர் நேரடியாக தொடர்புபட்டுள்ளார் .உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்காமல் பிரதி முகாமையாளர் அவ்வாறு செயற்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து தோட்ட முகாமையாளருடன் தொலைபேசியில் உரையாடி உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு பணிப்புரை விடுத்தேன் என்றார்.

மக்களின் ஒத்துழைப்பை கோரியுள்ள பொலிஸ்:

# நல்லூர் கோவிலில் விசேட கண்காணிப்பு

■ எம். றொசாந்த்

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் திங்கட்கிழமை (21) முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாள்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது.

அந்தக் காலத்தில், நல்லூர் கோவில் வளாகத்தில் பொலிஸாரும் யாழ்ப்பாண மாநகர சபையினரும் விசேட நடைமுறைகள், வீதி ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துகின்றனர். எனவே, இதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்காக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் வழிகாட்டுதலின் கீழ், நல்லூர் கோவில் சூழலில் பொலிஸார் சிவில் உடையிலும், சீருடையிலும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளார்கள். எனினும் பொதுமக்கள் தங்களுடைய உடமைகளை தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள், வீடுகளை நன்றாகப் பூட்டி, தங்களுடைய வீடுகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொண்டு, கோவிலுக்கு வந்து செல்ல வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



# கொள்ளையர் பயத்தால் குப்பைமேடு சென்ற எட்டுப் பவுண் நகைகள்

■ எம். றொசாந்த்

நகைகளை கொள்ளையர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில், பழைய துணி ஒன்றில் கட்டி, குப்பைகள் போல வீட்டிலேயே பாதுகாத்து வந்த நகைகளை, குப்பைகளோடு வீசிய நிலையில் அவற்றை குப்பை மேட்டில் இருந்து சுகாதார பிரிவினர் மீட்டு உரியவரிடம் கையளித்துள்ளனர்.

சாவகச்சேரி, மண்டுவில் வட்டாரத்தில் வேலுப்பிள்ளை வீதியில் வசிக்கும் குடியிருப்பாளர், எட்டு பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில், பழைய துணியில் கட்டி, குப்பைகள் போல வீட்டிலேயே பாதுகாத்து வந்துள்ளார். அண்மையில், அவரது வீட்டை சுத்தம் செய்கின்ற பொழுது, குறித்த நகைகளும் குப்பைகளோடு குப்பைகளாக கட்டப்பட்டு வீதியில் கொட்டப்பட்டிருந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் (21) மண்டுவில் வட்டாரத்தில் வழமையான கழிவகற்றும் நடவடிக்கையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டிருந்தபோது, குறித்த வீட்டில் முன்னால் இருந்த குப்பைகளும் சுகாதார தொழிலாளர்களால் அகற்றப்பட்டு, உழவியந்திரத்தில் குப்பைகள் தரம் பிரிக்கின்ற இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில், வீட்டிலிருந்த நகைகள் காணாமல் போனதையடுத்து, நிலைமையை உணர்ந்த உரிமையாளர், குப்பைகளோடு நகைகளும் வீதியில் கொட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில், வீதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரீ.வீ கமெராக்களை சோதனையிட்டுள்ளார். அப்பொழுது, நகராட்சி மன்ற கழிவகற்றும் வாகனம் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தமையை அவதானித்துள்ளார்.

உடனடியாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு சென்று நிலைமை தொடர்பாக தெரியப்படுத்தியதையடுத்து, சுகாதார தொழிலாளர்கள் தேடுதலை மேற்கொண்டபோது, பழைய துணியில் கட்டி வீசிய சுமார் எட்டு பவுண் நகைகள், சுகாதார தொழிலாளியான சண்முகம் தமிழ்சனால் மீட்கப்பட்டு, உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

நகராட்சி மன்ற சுகாதார பகுதியினரின் நேர்மையான செயற்பாடு, நகராட்சிமன்ற குடியிருப்பாளர்கள், நகர வர்த்தகர்கள் மத்தியில் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 'இனிய நந்தவனம்' இலங்கை சிறப்பிதழ் அறிமுக விழா

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் 'இனிய நந்தவனம்' இலக்கிய சஞ்சிகையின் இலங்கை சிறப்பிதழ் அறிமுக விழா, காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை (21) மாலை நடைபெற்றது

காத்தான்குடி இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தலைவர் 'கவிமாமணி' ரீ. எல் ஜௌபர்கான் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், 'தினகரன்' பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ் சேவையின் ஆலோசகர் புரவலர் காசிம் உமர், மாகாண பண்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் உட்பட கலை இலக்கியவாதிகள், பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நூல் விமர்சன உரையை கவிஞர் செங்கதிரோன் நிகழ்த்தினார்.

வெருகல் ஸ்ரீ சென்பகா மகா வித்தியாலயத்தில்

# விசேட கல்வி அலகு பிரிவு

■ ஹஸ்பர்

மூதூர் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஈச்சலப்பற்று சென்பகா மகாவித்தியாலயத்தில் விசேட கல்வி அலகு நேற்று (22) திறந்து வைக்கப்பட்டது.

வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ அனஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த. பிரணவன், அரச அதிகாரிகள், விசேட கல்வி அலகு மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் கல்வியை வழங்கும் நோக்கில் சமூக சேவைகள் திணைக்களம் இவ்வாறான திட்டத்தை செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கிளிநாச்சி நீதிவான் நீதிமன்றத்தில்

# மணல் ஏல விற்பனை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை, முற்பகல் ஒன்பது மணிக்கு, மணல் ஏல விற்பனை மேற்கொள்ளப்பட உள்ளதாக நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்ட மணலே இவ்வாறு ஏலத்தில் விடப்பட உள்ளதாகவும் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் குறித்த மணலைப் பார்வையிட முடியும் என்றும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி கண்டியில் அங்குராப்பணம்

■ மொஹமட் ஆசிக்

மலையகத்திலுள்ள முன்னணி மகளிர் அமைப்புகள் இணைந்து, கண்டியில் 'பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி' என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் வாழும் மலையக மக்களின் சமூக, கல்வி பொருளாதாரம் ஆகிய துறைகளில் அபிவிருத்தி அடையும் நோக்கில் இயங்கும் மனித அபிவிருத்தி தாபனத்தின் கண்டி தலைமையகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி, சமூக நல்லிணக்க மன்றம், சமூக அபிவிருத்தி தாபனம் போன்ற பல அமைப்புகளின் அங்கத்தவர்கள் இதில் இணைந்துள்ளனர்.

மேற்படி அங்குராப்பண வைபவத்தில், மனித அபிவிருத்தித் தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.பீ சிவப்பிரகாசம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றிய பெண்களின் ஒத்துழைப்பு முன்னணியின் பொதுச் செயலாளரும், மலையக மகளிர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான திருமதி பீ. லோகேஸ்வரி, "மலையக மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இது அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் செயற்பாட்டாளர்கள் இதில் இணைய முடியும்" எனவும் தெரிவித்தார்.



மனித அபிவிருத்தித் தாபனத்தின் தலைவர் கலாநிதி பீ.பீ சிவப்பிரகாபசம் தெரிவித்ததாவது: "இன்று 'மலையகம் 200' என்று கொண்டாடும் நாம் அதனை ஒரு கொண்டாட்மாகக் கருத முடியாதுள்ளது. ஏனெனில் இன்னும் அடிமைத் தனத்திலேயே மலையகம் உள்ளது. கல்வி பொருளாதாரம், சுகாதாரம் போன்றவற்றை இன்னும் போராடியே பெற வேண்டி உள்ளது. எனவே, 'மலையகம் 200' கொண்டாடப்படுவதை விட, ஏனைய சமூகங்கள் அனுபவிக்கும் உரிமைகளைப் போன்று, மலையக சமூகமும் உரிமைகளை அனுபவிக்க போராட வேண்டிய காலமாக இருக்கிறது" என்று தெரிவித்தார்.

# மரக்குற்றிகளுடன் லொறி சிக்கியது

■ ராமு தனராஜா

அனுமதி பத்திரம் இன்றி மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறியை ஹாலிஎல பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரொக்கத்தன்ன பகுதியில் இருந்து பதுளை நோக்கி டேப்பன்டைன் மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை, ஹாலிஎல நகரில் வைத்து சோதனைக்கு உட்படுத்திய போது, அனுமதி பத்திரம் இன்றி மரக்குற்றிகளை ஏற்றி செல்வது கண்டுபிடிக்கபட்டதாகவும் ரொக்கத்தன்ன பகுதியை சேர்ந்த 53 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதுடன் லொறியையும் கைப்பற்றியுள்ளதாகவும் ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.



# நல்லூரில் பால் தேநீர் 200 ரூபாய்




நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக உள்ள சைவ உணவகத்தில், ஒரு கோப்பை பால் தேநீர் 200 ரூபாய்க்கு விற்கப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்று, நல்லூர் கோவிலுக்கு அருகில் தனது கிளை நிறுவனம் ஒன்றினை ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற கொடியேற்ற உற்சவத்துக்கு சென்ற மக்கள் சிலர், அங்கு பால் தேநீர் பருக சென்ற போது, ஒரு கோப்பை பால் தேநீர் 200 ரூபாய்க்கு விற்கப்படுவதாக தெரிவித்தனர்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் கூட, ஒரு கோப்பை பால் தேநீர் இவ்வளவு விலைக்கு விற்கப்படவில்லை என குற்றம் சாட்டும் மக்கள் இவ்வாறு அதிக விலையில் விற்பனை செய்வதை நுகர்வோர் அதிகார சபையினரும் கண்டுகொள்வதில்லை எனக் குற்றம் சாட்டுகின்றனர்.

24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.

அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

# மருந்துகள் தட்டுப்பாட்டால் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லை

தவறான மருந்தை உட்கொண்டவர், தவறான ஊசி ஏற்றப்பட்டவர், தனியார் மருத்துவமனையில் கொள்வனவு செய்த மருந்தை உட்கொண்டவர் போன்றோர் மரணமடைந்தனர் என்ற செய்திக்கு தற்போது குறைவில்லை. உயிர் காக்கும் மருந்துகள் ஒவ்வொரு நாளும் உயிர்களை பறித்துக்கொண்டே இருக்கின்றன.

சில வைத்தியசாலைகளுக்குச் செல்வோர், மருந்துச்சீட்டை மட்டுமே எடுத்துக்கொண்டு வெறும் கையுடன் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு மருந்துகளுக்கான தட்டுப்பாடு, அரச வைத்தியசாலைகளில் தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றது.

இதனால், இலங்கையின் சுகாதாரத்துறை கடுமையான சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. இதற்கிடையே வைத்தியர்களும் வைத்திய நிபுணர்களும் நாட்டை விட்டு தப்பியோடிவிட்டனர். இவையும் நெருக்கடியை பன்மடங்காக்கும்.

அரசாங்க வைத்தியசாலைகளில் வழங்கப்படும் மருந்துச்சீட்டில் எழுதப்பட்டிருக்கும் குளிசைகள், மருந்துகள் தனியார் மருந்துசாலைகளில் இருக்கின்றன. எனினும், அதன் விலைகள்தான் தலையை சுற்றுகின்றன. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் சாதாரண மக்களுக்கு, அந்தளவுக்கு விலைகொடுத்து மருந்துகளை கொள்வனவு செய்யமுடியாது.

நாட்டில், 216 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகின்றது. உயிரைக் காக்கும் 14 மருந்துகள் உட்பட அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என சுகாதாரத் துறையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது பயன்பாட்டில் உள்ள சுமார் 1,300 மருந்துகளில், 383 மருந்துகள் அத்தியாவசியமானதாகக் கருதப்படுகிறது.

சுகாதார அமைச்சர் கெஹெலியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக கையொப்பம் திரட்டும் நடவடிக்கைகள் ஆங்காங்கே முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில், சுகாதாரத்துறையின் கவனயீனமாக உயிரிழப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

நிலைமை இந்த வேகத்தில் செல்லுமாயின், எந்தவோர் உயிருக்கும் உத்தரவாதம் அளிக்கமுடியாத நிலைமையே ஏற்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சுகாதாரத் துறையில், ஏற்பட்டிருக்கும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து, அத்தியாவசியமான மருந்துகளை கையிருப்பில் வைத்திருக்கும் திட்டமொன்றை வகுப்பதே சிறந்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஊடாக, சுகாதார அமைச்சரை பதவிவிலக்கிவிட்டு புதியவரை நியமிக்கலாம். எனினும், தற்போது இருக்கும் மருந்துகள் தட்டுப்பாடு பிரச்சினை, அப்படியேதான் இருக்கும். விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரை பதவி நீக்குவதன் ஊடாக, பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. சுகாதாரத்துறையில் காணப்படும் பொதுவான பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணவேண்டும்.

15 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் தங்களுடைய வயதுக்கு ஏற்றவகையில் போஷாக்குடன் இல்லையென மற்றுமொரு புள்ளிவிவரத் தகவல் தெரிவிக்கின்றது. நிலைமை இவ்வாறு நீடித்துக்கொண்டே போகுமாயின், போஷாக்கில்லாத சமுதாயத்தையே நாம் எதிர்காலத்தில் பார்க்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

பிரச்சினைகள் நாலாபக்கமும் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கின்றன. அதில், சுகாதாரத்துறை பிரச்சினை மிகவும் முக்கியமானது. ஒருவரின் உயிரை காப்பாற்றக்கூடிய இந்தச் சுகாதாத்துறையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளில் பிரதான பிரச்சினையை இனங்கண்டு, அதற்குத் தீர்வை எட்டுவதன் ஊடாகவே,, ஊசலாடும் உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகிவிட்டது. அத்துடன் சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை.

தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள், எதிர்காலத்த்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் ஆகும் என்பதை உணர்கின்றார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும்.

இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள். கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன. மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள்.

எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. செய்த தவறுகளுக்கு, கர்மா தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட 'கர்மா' என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கோட்டா தொடர்ந்து இருந்திருந்தால்...



எம்.எஸ்.எம் ஐயூப்

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளைப் பற்றி ஆய்வுகளை நடத்தி, அடிக்கடி பெறுமதி வாய்ந்த அறிக்கைகளை வெளியிடும் 'வேடிட்டே ரிசேர்ச்' என்ற அரச சார்பற்ற புத்திஜீவிகள் சபை, கடந்த வருடம் இடம்பெற்ற பொதுமக்கள் போராட்டத்தைப் பற்றிய கருத்துக் கணிப்பொன்றை நடத்தி, அதன் பெறுபேறுகளை அண்மையில் வெளியிட்டு இருந்தது.

அதன்படி, இலங்கை மக்களில் 60 சதவீதமானோர், 'அரகலய' என்று பொதுவாக அழைக்கப்பட்ட அப்போராட்டத்தால் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறவில்லை என்று தெரிவித்து இருந்தனர். 29 சதவீதமானோர் எக்கருத்தையும் தெரிவிக்கவில்லை. 11 சதவீதமானோர் மக்கள் எழுச்சியால், மக்களின் அபிலாஷைகள் நிறைவேறியுள்ளதாக கூறியுள்ளனர். அவர்கள், ஐக்கிய தேசிய கட்சிக்காரர்களாகத் தான் இருக்க வேண்டும்.

இனவாதத்தைத் தூண்டி, பதவிக்கு வந்து நாட்டின் பொருளாதாரத்தை முற்றாகவே சீரழித்து, வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய ராஜபக்ஷர்கள் தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் இந்தக் கருத்துக் கணிப்பின் பெறுபேறுகளையும், மீண்டும் தலைதூக்குவதற்காகப் பாவிக்கிறார்கள். "மக்களில் பொரும்பாலானோர் போராட்டத்தை நிராகரித்துள்ளனர்" என்று இந்தக் கருத்துக் கணிப்பைக் காட்டி வாதிடுகின்றனர்.

மக்கள் எழுச்சியின் காலத்தில், பதுங்கி இருந்துவிட்டு, பின்னர் தாம் மட்டுமன்றி இந்நாட்டை ஆட்சி செய்த சகல அரசாங்கங்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பாளிகள் என்று கூறியவர்கள், இப்போது தாமல்ல, மக்கள் போராட்டமே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் என்று கூறுமளவுக்கு, மக்களை முட்டாள்களாகக் கருதுகின்றனர்.

கடந்த வருடம், சுமார் நான்கு மாதங்களாக நீடித்த மக்கள் போராட்டமானது, எந்தவோர் அரசியல் கட்சியாலோ அமைப்பாலோ ஏற்பாடு செய்யப்பட்டதல்ல. அது, முன்னொருபோதும் காணாத பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களின் கோபாவேசத்தின் விளைவாகும். வெடிக்கும் தருவாயில் அது இருந்த போது, சில சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் அதனை வழிநடத்த முன்வந்தாலும், போராட்டமானது அவர்களால் உருவாக்கப்பட்டதொன்றல்ல!

கடந்த வருட ஆரம்பத்தில், எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவியதை அடுத்து, பலர் அப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக, கிலோ மீற்றர் தூரத்தில் வாரக் கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியதாயிற்று! 10 மணித்தியாலத்துக்கு மேற்பட்ட மின்வெட்டும் அமலாக்கப்பட்டது. இந்த நிலையில் மக்கள் கொதித்தெழுந்து, ஜனாதிபதியின் இல்லத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம், பின்னர் இலட்சக் கணக்கில் மக்கள் கலந்து கொண்ட தொடர் போராட்டமாக மாறியது.

அவர்கள் வெறுமனே, வரிசைகளில் காத்திராமல் எரிபொருளையும் எரிவாயுவையும் கொள்வனவு செய்யும் வசதிக்காக போராடவில்லை. பொருளாதார நெருக்கடியால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவும் தமது பொருளாதார நிலைத்தன்மையை உறுபடுத்தி, தமது குடும்பத்துக்கு போதுமான உணவையாவது நிரந்தரமாக வழங்கக்கூடிய வருமானத்துக்காகவும் தமது கண்முன்னேயே இடம்பெறும் மாபெரும் ஊழல், மோசடி, வீண்விரயம் ஆகியவற்றை நிறுத்துவதற்காகவும் அவ்வாறு மக்கள் சொத்தை அபகரித்தவர்களை தண்டிப்பதற்காகவுமே அவர்கள் பேராராடினர். போராட்டத்தின் பிரதான சுலோகமாக 'கோட்டா கோ ஹோம்' என்பது இருந்தது.

இடதுசாரி இலக்கியங்களின் செல்வாக்குக்கு உட்பட் சிலர், ஜனாதிபதியின் அலுவலகத்தை பொது நூலகமாக்குவதற்கும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை பொதுமக்களின் பொழுதுபோக்குத் தளமாக மாற்றுவதற்கும் சிறுபிள்ளைத்தனமாக கனவு கண்டனர்.

ஆனால், போராட்டத்தின் விளைவாகவே பதவிக்கு வந்த புதிய ஆட்சியாளர்களால் அப்போராட்டம் திடீரென 2022 ஜூலை 22 ஆம் திகதி மிகக் கொடூரமாக நசுக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் காலிமுகத்திடலிலிருந்து அடித்து விரட்டப்பட்டனர். போராட்டக்காரர்களின் சிறுபிள்ளைத்தனமான எதிர்ப்பார்ப்புகள் மட்டுமன்றி, நியாயமான எதிர்ப்பார்ப்புகளும் கனவுகளும் காற்றில் பறந்துவிட்டன.

அவ்வளவு காலம் பதுங்கியிருந்த ஊழல் பேர்வழிகள் புதிய நிர்வாகத்தை கேடயமாக பாவித்து தலைதூக்கினர். பட்டினிக்கும் அவல வாழ்க்கைக்கும் எதிராக போராடியவர்கள், பதுங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையிலேயே, ஏறத்தாழ வாராந்தமாக மிகவும் பயனுள்ள அரசியல் பொருளாதார ஆய்வறிக்கைகளை வெளியிடும் 'வெரிட்டே ரிசேர்ச்' நிறுவனம், மக்கள் போராட்டம் பற்றிய இந்தக் கருத்துக் கணிப்பின் பெறுபேறுகளை வெளியிட்டுள்ளது.

"அரகலயவால் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறியதாக நீங்கள் கருதுகிறீர்களா?" என்பது, அந்நிறுவனம் இக்கருத்துக் கணிப்புக்காக மக்களிடம் முன்வைத்த ஒரு கேள்வியாகும்.

போராட்டம் எவ்வாறு முடிவடைந்தது என்பதன் அடிப்படையில் பார்த்தால், போராட்டத்தால் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறியதா என்பதை அறிய, கருத்துக் கணிப்புக்கள் நடத்தத் தேவையில்லை. ஏனெனில், அது முறியடிக்கப்பட்டு நசுக்கப்பட்ட போராட்டமாகும். நசுக்கப்பட்ட போராட்டமொன்றால், மக்களின் அபிலாஷைகள் நிறைவேறியதாக கூற முடியாது.

போராட்டத்தால் மக்கள் எதிர்ப்பார்த்த எதுவுமே நிறைவேறவில்லை என்று கூற முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் பிரதான கோரிக்கையாகும். அது நிறைவேறினாலும் அவருக்குப் பதிலாக, அவரது கட்சியின் உதவியாலேயே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி இருக்கிறார். கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் பதவி ஏற்றலோ, அதுவரையிலான பொருளாதார போக்கிலோ அல்லது திட்டங்களிலோ எவ்வித மாற்றத்தையும் கொண்டு வரவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் காரணமாக, பல உலக நிதி நிறுவனங்களால் கடன் பெற வாய்ப்பு கிடைத்தமை, தற்போதைய அரசாங்கத்தின் பெரு வெற்றியாகவும் பொருட்களுக்கான வரிசைகள் இல்லாமை, பொருளாதார முன்னேற்றமாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அவை வெற்றியா, முன்னேற்றமா என்பது தனியாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். அவை, வெற்றியாக இருந்தாலும் தோல்வியாக இருந்தாலும் அந்த நிலைமைக்கான அடித்தளத்தை இட்டவரும் பொருளாதாரத்தை இறுதியாக அழித்தவரும் ஜனாதிபதி கோட்டாபயாவார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை, தாமே ஆரம்பித்ததாக ஜனாதிபதி விக்கிரமசிங்க, பல இடங்களில் கூறிய போதிலும் கோட்டாவே அதைக் 2022 மார்ச் மாதம் ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்த்தின் கிழ், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புப் பணியை வழிநடத்தக்கூடிய நிபுணத்துவ அறிவோ அல்லது அதற்கான செல்வாக்கோ இலங்கையிலுள்ள எந்தவொரு நிறுவனத்திடமும் இல்லை. எனவே, அதற்காக சர்வதேச நிதி மற்றும் சட்ட ஆலோசகர்களான 'லசாரட்', 'கிளிபர்ட் சான்ஸ்' ஆகிய நிறுவனங்களும் கோட்டாவின் காலத்திலேயே தெரிவு செய்யப்பட்டன. அவற்றின் ஆலோசனைப் படியே தற்போது அப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நிதி சீர்த்திருத்தங்களைப் பற்றி, நாணய நிதியம் கடந்த காலங்களில் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும், உண்மையிலேயே அந்நிதியம் கடந்த வருடம் பெப்ரவரி மாதமே, அதாவது கோட்டா அந்நிதியத்திடம் உதவி கோர முன்னரே, அவற்றை பற்றி தன்னிச்சையாகவே முடிவு செய்து கருத்து தெரிவித்து இருந்தது. அவை கடந்த வருடம் மார்ச் மாதம் அந்நிதியம் இலங்கையைப் பற்றி வெளியிட்ட நாட்டைப் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

நாணய நிதியத்துடன் அரசாங்கத்தின் சார்பாக தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வரும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவையும் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்த்தனவையும் அப்பதவிகளுக்கு நியமித்தவரும் கோட்டாவே.

நாணய நிதியம் உதவி வழங்க முன்வந்தால் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களும் மீண்டும் இலங்கைக்கு கடன் வழங்க முன்வரும் என்பதும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு இருந்தது. அதுதான் தற்போது நடைபெறுகிறது.

அக்காலத்திலேயே உலக வங்கி தாம் ஏற்கெனவே இலங்கைக்கு வேறு திட்டங்களுக்காக வழங்கியிருந்த நிதியை எரிவாயு போன்றவற்றுக்காக செலவிட அனுமதி வழங்கியிருந்தது. எனவே, மக்கள் போராட்டத்துக்கான உடனடி காரணிகள் தற்போது காணக்கூடியதாக இல்லாதவிட்டாலும், போராட்டத்துக்கு முன்னர் இருந்த பொருளாதார பயணமே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அப்போதிருந்த அடிப்படை பொருளாதார காரணிகளும் மாறவில்லை. அவை, நாளை மக்களின் வாழ்வை அதள பாதாளத்துக்கு இழுத்துச் செல்லும் அபாயம் இன்னமும் இருக்கிறது.

அதாவது, கோட்டா தொடர்ந்து பதவியில் இருந்தாலும், தற்போதைய நிலைமை இதுவாகவே தான் இருந்திருக்கும். கோட்டாவைப் போலன்றி, ரணிலுக்கு இந்த விடயங்களைப் பற்றி, எந்த மேடையிலும் மிக அழகாகவும் விவரமாகவும் எடுத்துரைக்கும் அறிவாற்றல் இருக்கிறது.

நாட்டின் தற்போதைய நிலைமையை பொறுத்தவரை, இருவருக்கும் இடையிலான வேறுபாடு அவ்வளவு தான்! கோட்டாவின் ஆட்சி நீடித்திருந்தால் அரசியல் ரீதியாக நாட்டில் பல கொந்தளிப்புகள் இடம்பெற்றிருக்கலாம்.

போராட்டத்தின் பின்னரும் பொருளாதாரத்தில் மாற்றமேதும் இடம்பெறவில்லை என்பதை, மக்கள் உணர்ந்துள்ளதாக மேற்படி கருத்துக் கணிப்பின் மற்றொரு கேள்விக்கு மக்கள் அளித்துள்ள பதில்களால் தெரிகிறது.

"நாட்டை மீட்டெடுக்க என்ன செய்ய வேண்டும்" என்ற கேள்விக்கு, 51 சதவீதமானோர் ஊழல் மலிந்த நிலைமையையும் தவறான நிர்வாகத்தையும் மாற்ற வேண்டும் என்று பதிலளித்துள்ளனர். 34 சதவீதமானோர் பொருளாதார முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். 15 சதவீதமானோர் மட்டுமே, அரசாங்கத்தின் நிலைப்பாடான ஜனநாயகத்தை விட பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முதலிடம் வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## கடிதங்கள்

### இன்னொரு வைத்தியரை நியமியுங்கள்

பூநகரி, வேரவில் பிரதேச வைத்தியசாலைக்கு இன்னொரு வைத்தியரை நியமிப்பதற்கு வடமாகாண சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற இப்பிரதேசத்தில், வேரவில் பிரதேச வைத்தியசாலையே இயங்கிக் கொண்டுள்ளது. இவ்வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டும் பணியில் இருப்பதன் காரணமாக, வெளிநோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தே சிகிச்சை பெற்று செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

வைத்தியசாலையில் காணப்படுகின்ற வைத்தியர் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் சிகிச்சைக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் இன்னொரு வைத்தியரை நியமிப்பதன் மூலம், இப்பிரதேச வைத்தியசாலையில் நோயாளர்கள் வேகமாக சிகிச்சை பெற்று செல்லக் கூடிய நிலைமை உருவாகும்.

தற்போது பணியில் உள்ள வைத்தியர் விடுமுறையில் செல்லும் போது, அருகில் உள்ள வைத்தியசாலையில் இருந்து வருகை தரும் வைத்தியருக்காக நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் வேரவில் பிரதேச வைத்தியசாலைக்கு இன்னொரு வைத்தியரை நியமிப்பதற்கு வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பிரதேச பொது அமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்



# முடிவின்றித் தொடரும் யானை- மனித மோதல்

## அம்பாறை மாவட்ட கிராமங்களை அச்சுறுத்தும் காட்டு யானைகள்



**பாறுக் ஷிஹான்**

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பகுதியை ஊடறுத்து செல்லும் பிரதான வீதியின் ஊடாக நிந்தவூர், காரைதீவு பகுதிகளின் வீதியில் பெரிய யானைகளும் குட்டியானைகளும் என 17 க்கும் அதிகமான யானைகள், அப்பகுதி வயல் நிலங்களை நோக்கி தினமும் மாலை வேளையில் வருகை தருகின்றன. யானைகள் இவ்வாறு அணிவகுத்து வருகைதரும் போது, போக்குவரத்து தடைப்படுவதுடன் பொதுமக்களும் வீதியின் இருமருங்கிலும் அதிகளவாகக் குவிந்து, யானைக் கூட்டத்தை பார்வையிட்டு வருவதுடன், வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள், ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள், சத்தங்களை எழுப்பிய வண்ணமும் இருப்பர்.

இப்பிரதேச வயல்வெளிகளில் உள்ள வைக்கோல்களுக்கு தினந்தோறும் தீ வைப்பதால் காட்டில் உள்ள யானைகள் வெளிவந்த நிலையில், அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவித்து வருகின்றன.

தினந்தோறும் வரும் யானைக்கூட்டத்தை கட்டுப்படுத்தி, காட்டுக்கு விரட்டுவதற்கு, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உடனடியாக குறிப்பிட்ட இடத்துக்கு வருகை தருவதில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அண்மைக்காலத்தில், யானை - மனித மோதலால் யானைகளும் மனிதர்களும் மரணிக்கின்ற சந்தர்ப்பங்கள் சடுதியாக அதிகரித்துள்ளதுடன் யானை - மனித மோதலால், அதிகளவான மனித உயிரிழப்புகள் சம்பவிக்கும் நாடுகளில் இரண்டாவதாக இலங்கை காணப்படுகிறது.



இம்மோதலை கட்டுப்படுத்துவதில், வெற்றிகரமான முறையாக அடையாளம் காணப்பட்ட வேலி அமைக்கும் முறையின் கீழ், 2016ஆம் ஆண்டு வரை 4,211 கிலோ மீற்றர் வேலி அமைக்கப்பட்டது. இருந்தபோதிலும், அவற்றை முறையாகப் பராமரிக்கத் தவறியதன் காரணமாக, குறுகிய காலத்தில் கடுமையான பிரச்சினைகள் உருவெடுத்தன.

இலங்கையில், யானை - மனித மோதல் காரணமாக வருடமொன்றுக்கு உயிரிழக்கும் யானைகளின் சராசரி எண்ணிக்கை 271 ஆகக் காணப்பட்ட நிலையில், கடந்த வருடத்தில் 407 யானைகள் உயிரிழந்திருப்பதாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார். அத்துடன், யானை - மனித மோதல் காரணமாக வருடமொன்றுக்கு உயிரிழக்கும் மனிதர்களின் எண்ணிக்கை 85 ஆகக் காணப்பட்டதுடன், 2019ஆம் ஆண்டில் 122 பேர் உயிரிழந்திருப்பது பற்றிய தகவலும் வெளியானது.

யானை - மனித மோதலைத் தீர்ப்பதற்கு, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கான சிறப்பானதும் வினைத்திறனானதுமான வேலைத்திட்டத்தின் அவசியம் குறித்து, வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்படியாக, சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து, தேசிய ஒருங்கிணைப்புக் குழுவை அமைக்க, அமைச்சர் விமலவீர திஸாநாயக்க துரித நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.



யானைகளுக்கான பாதுகாப்பு வேலிகளை அமைக்கும்போது, தமது காணிகளின் எல்லைகள் இழக்கப்படும் என சில பகுதிகளில் மக்கள் காண்பிக்கும் எதிர்ப்புகளால் அந்தப் பணியை முன்னெடுப்பது இடைநிறுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறான விடயங்களை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள், பொதுமக்களுக்கு உண்மையை விளக்கிக் கூறி, சுமூகமான முறையில் தீர்வுகாண முன்வர வேண்டும் .

தற்போது யானைகளுக்குத் தடுப்பு வேலிகள் அமைப்பது மற்றும் அவற்றின் பராமரிப்பு பணிகள், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளபோதும், இது தொடர்பில் உரிய ஒப்பந்தங்கள் எதுவும் செய்துகொள்ளப்படாமை, பாரிய குறைபாடுகள் ஏற்பட வழிவகுத்துள்ளது. இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர் .

மேலும், கிராமிய குழுக்களை மீளப் புனரமைப்பதன் ஊடாக, யானை - மனித மோதல்களைத் தவிர்ப்பதுடன், வன பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள் மக்களுடன் நட்புடன் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் உணரப்பட்டுள்ளது.

அடுத்து, யானைகளை காயப்படுத்துவதற்கும் கொலை செய்வதற்கும் காரணமானவர்களைத் தண்டிப்பதற்கும் இது தொடர்பில் விரைவான நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்குவதும் அவசியமானதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் 2022, 2023 ஆண்டுகளில் 1,000 த்துக்கும் அதிகமான தடவைகள் குடிமனைகள், வயல்களுக்குள்



யானைகள் ஊடுருவியுள்ளன. இதில் 100க்கும் அதிக தடவைகள், மிக ஆபத்தான சூழலில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவியுடன் அவை மீண்டும் காடுகளுக்குள் விரட்டப்பட்டுள்ளன. அத்துடன், 50க்கும் அதிக தடவைகள் யானைகளின் ஊடுருவலால் வீட்டுத்தோட்டங்கள், வயல்கள் நாசமாகியுள்ளமையும் புள்ளிவிவரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

கரும்பு, தென்னை, பாக்கு, சோளம் பயிர்கள் யானைகளின் ஊடுவலால் நாசமாகியுள்ளதுடன் யானை- மனித மோதல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமை இங்கு சுட்டிக்காட்டதக்கது.

இதேபோல், காடுகளின் எல்லைகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின்வேலிகள் உள்ளிட்ட காரணங்களால் பல யானைகள் உயிரிழந்துள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

யானை - மனிதன் மோதலுக்கு தீர்வு காண்பதற்காக, காலத்துக்கேற்ற வேலைத்திட்டங்களை அமல்படுத்துவதில் அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ள நிலையில், பொதுமக்களின் ஒத்துழைப்புகள் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, யானை - மனிதன் மோதல் பிரச்சினை உக்கிரமடைய மனிதர்கள் அல்லது யானைகள் அத்துமீறுகின்றனவா, அரசாங்கத்தின் திட்டங்கள் போதுமானவையாக அமையவில்லையா போன்ற கேள்விகள் எழுகின்றன. . எனவே, யானை - மனித மோதலால் ஏற்படுகின்ற இழப்புகள், அவற்றைத் தடுப்பதற்கு அரசாங்கத்தின் பங்களிப்புகள் எவ்வாறாக அமைந்திருக்கின்றன போன்ற விடயங்களை ஆராய்வது அவசியமாகும்.

யானை - மனித மோதல் காரணமாக 2014 - 2018 வரையான காலப்பகுதியில் 1,128 யாணைகள் மரணித்துள்ளன. இவற்றில், துப்பாக்கிச் சூடு காரணமாக 251, மின்சாரம் தாக்கி 117, வெடிகளுக்கு இலக்காகி 249, நஞ்சு உடலுக்குள் சென்றமையால் 28, ரயில் மோதி 57 போன்ற காரணங்கள் மனிதனுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. 2014 - 2017 வரையான காலப்பகுதியில் காட்டு யானைகளில் 60 சதவீதமானவை மனித நடவடிக்கைகளால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யானை - மனித மோதலுக்கான காரணங்களாக, மனிதர்களால் முன்னெடுக்கப்படுகின்ற முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள், சட்டவிரோத காடழிப்புகள் காரணமாக நில அமைப்பில் ஏற்படுகின்ற மாறுதல்கள், வளமான வாழ்விடங்கள் இல்லாமல் போதல், யானைகளின் வலசப் பாதைகளை தடை செய்தல் போன்ற காரணங்களால், காட்டு யானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் நிலை ஏற்படுகிறது.

யானை - மனித மோதல், பிரதானமாக எட்டு மாகாணங்களில் 58 பிரதேச செயலகப் பிரிவுகளில் பரந்து காணப்படுகின்றது. இவற்றுள் அதிக மோதல் காணப்படும் பிரதேசமாக வெள்ளவாய, லுணுகம்வெஹர, அம்பாறை, உருணை, போரதீவுப்பற்று, கோரளைப்பற்று தெற்கு, மகியங்கணை, தெஹிஅத்தகண்டி, வில்கமுவ, திம்புலாகல, வெலகந்த, தெகிராவை, பளுகஸ்வெவ, கல்கமுவை, கொட்டவெஹெர, தில்வெரட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காடுகளுக்குள் உணவுத் தட்டுப்பாடு காரணமாக, குப்பைகள் கொட்டப்படும் 54 இடங்களில், 300 இற்கும் அதிகமான யானைகள் நடமாடுவது கண்டறியப்பட்டுள்ளது. யானைகள் குப்பைகளை உணவாக உட்கொள்வதன் காரணமாக, பல்வேறு நோய்களுக்கு இலக்காகுவது, அவற்றின் மரண பரிசோதனையில் தெரியவருகிறது. யானைகளின் வயிற்றுக்குள் உக்காத பொலித்தீன் பை, ஷொப்பின் பை, பிளாஸ்டிக் போத்தல் போன்ற பல்வேறு பொருட்கள் காணப்படுவதாக கால்நடை மருத்துவர்களின் மரணஅறிக்கையின் பெரும்பாலும் வெளிப்படுத்தப்படுகிறது.



இதற்கு சிறந்த உதாரணமாக, அம்பாறை மாவட்டத்தில் உள்ள அட்டப்பளம், அஸ்ரப் நகரில் கொட்டப்படும் குப்பைகளை, நூற்றுக்கணக்கான யானைகள் உண்ண வருகின்றன. கடந்த காலங்களில் இப்பகுதியில் பிளாஸ்டிக் குப்பைகளை உட்கொண்ட இரண்டு யானைகள் உயிரிழந்திருந்தன. கடந்த எட்டு ஆண்டுகளில் 20 யானைகள் குப்பைகளிலுள்ள பிளாஸ்டிக், பொலிதீன் பொருட்களை சாப்பிட்டு இறந்துள்ளன. இறந்த யானைகளை பரிசோதித்த போது, குப்பை மேட்டில் இருந்து பெருமளவிலான அழியாத பிளாஸ்டிக் பொருட்களை விழுங்கி உள்ளதாகவும் யானைகள் சாப்பிட்டு ஜீரணிக்கும் சாதாரண உணவு எதுவும் அவற்றின் உணவுக் கால்வாயில் தெரியவில்லை என கால்நடை மருத்துவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே, யானை - மனித மோதலை குறைப்பதற்கு, யானைகளைக் பேணும் தேசிய முக்கியத்துவத்தை அறிந்து, 'இலங்கையில் காட்டு யானைகளைப் பேணுதல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை' எனும் தலைப்பிலான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு திணைக்களத்துக்கு 2006 செப்டெம்பர் 20ஆம் திகதி அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, காட்டு யானைகளைப் பேணல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையினுள் பின்வரும் ஆறு கொள்கைகள் அடங்கியுள்ளன.

யானைகள் வாழும் இடங்களைப் பேணும் பூமி வலயமாக அறியப்பட்ட வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்துக்குரிய காப்பகம் போன்று, யானைகளை பேணும் மகாவலிக்குரிய பிரதேசங்களையும் கண்டறிந்து யானைகளை பேணும் பிரதேசங்களை அமைக்கவும் பிரேரணை செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வகையினுள் யானைகளைப் பேணும் ஐந்து பிரதேசங்கள் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் அறியப்பட்டு, யானைகள் பேணும் பிரதேசமாக பெயரிடப்பட்டிருந்தது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், மகாவலி காப்பகத்துக்கு மேலதிகமாக யானைகள் வாழும் காடுகளாக தனியார் நிலங்களையும் உள்ளடக்குவதாக முகாமைத்துவப்படுத்திய பாதுகாப்பகம் அமைக்க, இதன் மூலம் பிரேரிக்கப்பட்டது. அதற்கமைய தற்போது இலங்கையில் முகாமைப்படுத்தப்பட்ட யானைகள் பாதுகாப்பகமாக மத்தள யானைகள் முகாமைத்துவ காப்பகம் மட்டுமே அறியப்பட்டுள்ளது. இது முன்னோடி செயற்றிட்டமாக தென் மாகாணத்தில் செயற்படுத்த பிரேரிக்கப்பட்டுள்ளது.

யானை - மனித மோதலை குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும், அவற்றை முறையாக அமல்படுத்தப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை காரணமாக, யானை - மனித மோதலின் இழப்புகளை குறைப்பது இன்று வரையும் முடியால் உள்ளமை வெளிப்படையாகும்.

இதனால் குறித்த மோதலால் யானைகளும் மனிதர்களும் தொடர்ச்சியாக மரணித்து வருகின்றனர். எனவே, மனிதர்களையும் யானைகளையும் காப்பாற்றவும் சொத்துகளை பாதுகாக்கவும் உடனடியாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.



ஜப்பான்

# கதிரியக்க நீரை வெளியேற்றுகிறது ஜப்பான்

ஜப்பானில் 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், ஒரு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட சுனாமியால் பெரும் கடல் அலைகள், ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்தின் உள்ளே புகுந்து மின் மற்றும் குளிரூட்டும் அமைப்புகளை சேதப்படுத்தியது.

மேலும் சேதத்தைத் தடுக்கவும், குளிரூட்டும் அமைப்பிற்கு மாற்றாகவும் கடல் நீர் மற்றும் போரிக் அமிலம், பெரும் அளவில் அந்த ஆலைக்குள் செலுத்தப்பட்டது. இதனால் அசுத்தமான கடல் நீர் அங்கு பெருமளவில் தேங்கியது. இந்த நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டால்தான், அணுமின் நிலையத்தை செயலிழக்க செய்யும் நீண்ட பணியை அணுமின் தொழில்நுட்ப பொறியாளர்களால் செய்ய முடியும்.



ஆனால், இந்த நீரை கடலுக்குள் விடுவதற்கு ஜப்பான் நாட்டை சேர்ந்த உள்ளூர் மீனவர்களும், சீனா மற்றும் தைவான் உள்ளிட்ட சில கிழக்கு ஆசிய நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்தாலும், சர்வதேச அணுசக்தி முகாமையும், ஐ.நாவின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பும், சுத்திகரிக்கப்பட்ட நீர் கடல்வாழ் உயிரினங்களுக்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது என்று திட்டவட்டமாக கூறி, இந்த நடவடிக்கைக்கு அனுமதி அளித்தது. இந்நிலையில் வருகிற 24ஆம் திகதி சுத்திகரிக்கப்பட்ட கதிரியக்க நீர் வெளியேற்றப்படும் என ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா அறிவித்துள்ளார்.



அபுதாபி

## ரூ.2 கோடிக்கு ஏலம் போன பருந்து

அபுதாபியில் உள்ள தேசிய கண்காட்சி மையத்தில் சர்வதேச கண்காட்சி அடுத்த மாதம் இரண்டாம் திகதி தொடங்குகிறது.

இதையொட்டி எமிரேட்ஸ் பால்கனர்ஸ் கிளப் சார்பில் பருந்து ஏலம் நடைபெற்றுள்ளது.


இதில் உள்ளூர் மற்றும் சர்வதேச பண்ணைகளில் இருந்து பல்வேறு வகையான பருந்துகள் இடம்பெற்றன. அவற்றில் சிறந்த மற்றும் அரிய வகையான பருந்துகள் இடம்பெற்றிருந்தன. அதில் அபூர்வமான அமெரிக்க பருந்து ஒன்று 1 மில்லியன் டொலருக்கு ஏலம் போய் உள்ளது.

இந்த வெள்ளை நிற பருந்தை சொந்தமாக வாங்குவதற்கு பலரும் போட்டி போட்டுள்ளனர்.

அமெரிக்கா

## 'ஜம்ப்-ரோப்பிங்' மூலம் கின்னஸ் சாதனை படைத்த பூனை

அமெரிக்காவில் உள்ள மிசூரி பகுதியை சேர்ந்த கிட்கேட் என்ற 13 வயது பூனை, அதன் உரிமையாளர் திரிஷா சீப்ரிட் உதவியுடன் ஒரு நிமிடத்தில் அதிக முறை 'ஸ்கிப்' செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளது. பூனை அதன் உரிமையாளருடன் சேர்ந்து' ஜம்ப் ரோப்பிங்' திறமையை வெளிப்படுத்திய வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. அதில், ஒரு நிமிடத்தில் 9 முறை ஸ்கிப்பிங் செய்து கிட்கேட் பூனை இந்தச் சாதனையை படைத்துள்ளது.



இந்தச் சாதனை குறித்து பூனையின் உரிமையாளரான திரிஷா சீப்ரிட் கூறுகையில், "ஜம்ப் ரோப்பிங் செய்வது எனக்கும், எனது பூனைக்கும் பிடித்தது. மேலும் பூனையின் வயது காரணமாக நாங்கள் குதிப்பதை குறைந்த எண்ணிக்கையில் வைத்திருந்தோம்" என்றார்.

கோவை


## தாடியால் நின்ற திருமணம்



கோவை சூலூரை சேர்ந்த தொழில் அதிபர் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு, தனது மகனுக்கு பெரிய இடத்தில் சம்பந்தம் பேசி முடித்தார். இதனை தொடர்ந்து இருதரப்பு பெற்றோரும் திருமண ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளனர். அந்த ஜோடியின் திருமணம் நடப்பதாக இருந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்பு சூலூர் தொழில் அதிபர், தனது மகனிடம் "தாடியை எடுத்து விடு, அதுதான் உனக்கு நன்றாக இருக்கும்" என்று கூறி உள்ளார். இதன்படி புதுமாப்பிள்ளை சலூனுக்கு புறப்பட்டுள்ளார்.

அப்போது அவருக்கு மணமகளிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. உங்களுக்கு தாடி அழகாக உள்ளது; எனவே அதை எடுக்க வேண்டாம்; 'டிரிம்' செய்து கொள்ளுங்கள்; அது போதும்" என்று அறிவுரை கூறி உள்ளார். இதனை தொடர்ந்து, புது மாப்பிள்ளை சலூனுக்கு சென்று, மணமகளின் விருப்பப்படி தாடியை 'டிரிம்' செய்துள்ளார்.அதன்பிறகு வீட்டுக்கு வந்தார். அப்போது தந்தைக்கு, மகன் தாடியுடன் இருந்தது ஆத்திரத்தை ஏற்படுத்தியது. எனவே அவர், நான் சொன்ன பிறகும் ஏன் தாடியை எடுக்கவில்லை என்று சத்தம் போட்டார். அதற்கு புது மாப்பிள்ளை, மணமகளின் விருப்பப்படி தாடியை டிரிம் செய்ததாக தெரிவித்து உள்ளார். இது தந்தையை மேலும் ஆத்திரத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

நான் தாடியை சேவிங் செய்ய சொன்னேன். ஆனால் நீ அந்த பெண்ணின் விருப்பப்படி தாடியை டிரிம் செய்து உள்ளாய். என்னை மதிக்க தவறி விட்டாய் என்று சத்தம் போட்டு உள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த மகன் எவ்வளவோ சமாதானப்படுத்தி பார்த்து உள்ளார். இருந்தபோதிலும் தந்தை மனம் இரங்கவில்லை. வீட்டில் இருந்து மகனை வெளியே தள்ளி கதவை பூட்டிக் கொண்டார். இந்த நிலையில் அவர் மணமகளுக்கு அழைப்பு ஏற்படுத்தி நடந்த விவரங்களை தெரிவித்து உள்ளார். இது அந்த பெண்ணுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எனவே அவர் தந்தையிடம் கூறி மணமகனின் தந்தையை சமாதானப்படுத்தும்படி கேட்டுக்கொண்டு உள்ளார். இதன்படி அவர், மணமகனின் வீட்டுக்கு புறப்பட்டு சென்றார். அப்போது அங்கு இருந்த தொழில் அதிபரிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினார். இருந்தபோதிலும் அவர் சமரசம் ஆகவில்லை. எனவே மணமகளின் தந்தை புறப்பட்டு போய் விட்டார். இதற்கிடையே மணமகனின் தந்தை சமூகவலைதளத்தில், எனது மகனின் திருமணம் நின்று விட்டது. எனவே திருமண மண்டபத்துக்கு யாரும் வர வேண்டாம் என்று பதிவு ஒன்றை வெளியிட்டு உள்ளார். இது மணமகள் வீட்டாரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.



மத்திய பிரதேசம்

## மழை பெய்ய கழுதைக்கு குலாம் ஜாமுன்

மழை பெய்ய வேண்டி ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து கழுதைக்கு குலாப் ஜாமுன் ஊட்டிவிடும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது. மத்திய பிரதேச மாநிலத்தின் மண்ட்ஸர் மாவட்டத்தை சேர்ந்த கிராம மக்கள் தான் இந்த வினோத சடங்கை செய்துள்ளனர்.

கிராம மக்கள் மழைக்காக வினோத சடங்கு செய்த சம்பவம், பலருக்கும் புதிதாக இருக்கலாம். ஆனால் அவர்களை பொறுத்தவரையில், கழுதைக்கு குலாப் ஜாமுன் ஊட்டிவிட்ட சடங்கு அமோக வெற்றி தான். குலாப் ஜாமுன் ஊட்டிவிட்ட இரண்டே நாள்களில் அந்த மாவட்டத்தில் மழை பொழிந்து, கிராம மக்கள் வேண்டுதல் பலித்து விட்டது.

> **" கழுதைக்கு குலாப் ஜாமுன் ஊட்டிவிட்ட இரண்டே நாள்களில் அந்த மாவட்டத்தில் மழை பொழிந்து, கிராம மக்கள் வேண்டுதல் பலித்தது. மழை பெய்ததை அடுத்து ஊரில் உள்ள பூசாரி கழுதையை வயல்வெளிக்கு அழைத்துச் சென்று விவாசய பணிகளை தொடக்கி வைத்தார்**

மழை பெய்ததை அடுத்து ஊரில் உள்ள பூசாரி கழுதையை வயல்வெளிக்கு அழைத்துச் சென்று விவாசய பணிகளை தொடக்கி வைத்தார். வினோத சடங்கை தொடர்ந்து, இரண்டு நாள்கள் கழித்து பெய்யத் தொடங்கிய மழை, 24 மணி நேரத்திற்கு நீடித்தது. மழை பெய்ததால் ஊர் மக்கள் மகிழ்ச்சி அடைந்த நிலையில், அதனை கொண்டாடும் வகையில் மீண்டும் கழுதைக்கு குலாப் ஜாமுன் ஊட்டிவிட்டனர்.

ஆசியக் கிண்ணத்துக்கான

# இந்திய குழாமில் திலக் வர்மா

ஆசியக் கிண்ணத்துக்கான இந்தியக் குழாமில் திலக் வர்மா இடம்பெற்றுள்ளனர். வர்மா இதுவரையில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காயத்திலிருந்து குணமடைந்த லோகேஷ் ராகுல், ஷ்ரேயாஸ் ஐயர் ஆகியோரும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), ஷுப்மன் கில், இஷன் கிஷன் (விக்கெட் காப்பாளர்), விராட் கோலி, ஷ்ரேயாஸ் ஐயர், லோகேஷ் ராகுல் (விக்கெட் காப்பாளர்), திலக் வர்மா, சூரியகுமார் யாதவ், ஹர்டிக் பாண்டியா (உப அணித்தலைவர்), இரவீந்திர ஜடேஜா, அக்ஸர் பட்டேல், குல்தீப் யாதவ், ஷர்துல் தாக்கூர், ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ், பிரசீத் கிருஷ்ணா, சஞ்சு சாம்ஸன் (மேலதிக வீரர்)



வட மாகாண 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உடற்பயிற்சி:

## முதலிடம் பெற்ற ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி

■ பு. கஜிந்தன்

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டிகளில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி முதலிடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் இளவாலை ஹென்றிஸ் பாடசாலை இரண்டாமிடத்தையும், வயாவிளான் மத்திய கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.




20 வயதுக்குட்பட்டோருக்கான பெண்களுக்கான கபடி

## தேசிய மட்டத்தில் பழுகாமம் கண்டுமணி ம.வி, பட்டிருப்பு ம.ம.வி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

தேசிய மட்ட 20 வயதுக்குட்பட்டோருக்கான பெண்களுக்கான கபடிப் போட்டிகளுக்கு பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம், பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற கபடிப் போட்டிகளின் இறுதியில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தை கண்டுமணி மகா வித்தியாலயம் வென்று சம்பியனான நிலையிலேயே இரண்டு பாடசாலைகளும் தேசியத்துக்குத் தெரிவாகியுள்ளன.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மேற்படி கபடி போட்டிகளில் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 61 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள்



பங்கேற்றனர். பட்டிருப்பு தேசிய பாடசாலை 17 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

கிழக்கு மாகாண 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான எறிபந்து:

## சம்பியனான கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி

### தேசிய மட்டத்துக்குத் தெரிவு

■ அஸ்ஹர் இப்றாஹீம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து போட்டியில் 20 வயதுக்குட்பட்ட பெண்களில் கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரி சம்பியனானது.

ஏறாவூர் பொது விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியை வென்றே கார்மல் பற்றிமா கல்லூரி சம்பியனாகி தேசிய மட்டத்துக்கும் தகுதி பெற்றது.



சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில்

## நாவிதன்வெளி கோட்டம் முன்னிலை

■ வி.ரி. சகாதேவராஜா

சம்மாந்துறை-வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் 469 புள்ளிகளைப் பெற்று நாவிதன்வெளிக் கோட்டம் முதலிடத்தை சுவீகரித்துக் கொண்டது.

இரண்டாமிடத்தை 435 புள்ளிகளைப் பெற்ற சம்மாந்துறை கோட்டமும், மூன்றாமிடத்தை 183 புள்ளிகளைப் பெற்ற இறக்காமம் கோட்டமும் பெற்றுக் கொண்டன.

நாவிதன்வெளி கோட்டத்தில் 171 ஆண்களும் 298 பெண்களும் இந்த 469 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். சம்மாந்துறை கோட்டத்தில் 195 ஆண்களும் 240 பெண்களும் 435 புள்ளிகளைப்



பெற்றனர். இறக்காமம் கோட்டத்தில் 183 ஆண்கள் 183 புள்ளிகளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அங்கு பெண்கள் கலந்து கொள்ளவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 23 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹூனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.